சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திருமதி. இரா. சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்.,

| | | | |
|---|---|---|---|
| வா.சா. | 1 | நாள் : 27.07.2026 | |
| அசல் வழக்கு எண். | 34/2019 | | |
| பெயர் | மீராராணி | க/பெ | கணேசன் |
| வயது | 41 | ஊர் | ஆலங்காடு |

சாட்சி அழைக்கப்பட்டு திருமதி. எஸ். லலிதா, இருக்கை எழுத்தர் நிலை -1 என்பவரால் சத்யபிரமாணம் செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை:

வாசாஆ 6 முதல் 8 ஆவணங்கள் தாவா ஏ பட்டியலில் 10வது அயிட்ட சொத்திற்கானவை என்றால் சரிதான். அந்த சொத்தின் புல எண். 153 8 A1 என்றால் சரிதான். அந்த சொத்தை கேசவ படையாட்சி இறந்த பிறகு அவரின் நான்கு மகன்கள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா ஏ பட்டியலில் உள்ள 10வது அயிட்ட சொத்தை தவிர மற்ற சொத்துக்கள் பிரிபடாமல் கேசவபடையாட்சி பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். கேசவபடையாட்சி மகன்களில் என் மாமனார் திருவேங்கடம் ஒருவர் என்றால் சரிதான். 25.06.2002ல் என் மாமனாரும் அவரின் மற்ற சகோதரர்களும் பாகப்பிரிவினை செய்தார் என்றால் சரிதான். பாகபத்தியத்தில் கண்ட சொத்தைதான் இந்த பிரதிவாதிகள் அடையவேண்டுமென்று உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். என் மாமனார் 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த உயிலை நானோ என் கணவரோ ஆட்சேபிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குரையில் சொத்துவிவரத்தில் வாசாஆ 9 ஆவணம் சம்பந்தமாகவும் டிராக்டர் கடன் சம்பந்தமாகவும் எந்த விவரமும் காணப்படவில்லை என்றால் சரியல்ல. டிராக்டர் சம்பந்தமாக நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 9 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

கே. மீராராணி

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

27/7/26